பக்கங்கள்:-19

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 20 | சனிக்கிழமை | 01.02.2025 | அதிர்வு 183 |
|---|---|---|---|---|---|

## தமிழரின் காவலனாக திகழ்ந்தவரே மாவை!

### பிரதமர் ஹரிணி இரங்கல்



தமிழ் மக்களின் பாது காவலனாக மாவை சேனாதிராஜா திகழ்ந்தார் என்று பிரதமர் ஹரிணி 05



## வடக்கு மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்போம்!

### வல்வெட்டித்துறையில் ஜனாதிபதி உறுதி



(எஸ்.நிதர்ஷன்)

"வடக்கு மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்போம். இந்த மக்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்ய மாட்டோம்."

- இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். 05



## யாழ். வைத்தியசாலையிலிருந்து இடமாற்றப்பட்ட வைத்திய நிபுணர் மீள் அழைக்கப்பட வேண்டும்!

### ஜனாதிபதியிடம் சிறீதரன் எம்.பி. நேரில் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

"விசேட வைத்திய நிபுணர் ஒருவர் மாற்றீடு ஆளணி எதுவும் இன்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து விடுவிக்கப்பட்டமையால் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்களின் நிலை பெரும் கவலைக்குரியதாகவும் சவாலாகவும் மாறியுள்ளது. இவர்களுக்கான சிகிச்சைகளில் ஏற்படும் காலதாமதம் அந்தச் சிகிச்சைகளின் பலனைக் கேள்விக்குறியாக்கும். பல் முக சீராக்கல் பிரிவின் 07






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் இறுதி நிகழ்வுகள் நாளை நடைபெறவிருக்கின்றன.

அவரது பூதவுடல் வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் நடைபெற இருக்கும் அவரது இல்லத்தில் அரசியல் ரீதியில் ஓர் இறுக்கமான சூழல் நிலவி வருவதான பேச்சு அல்லது கருத்து உண்டு.

அண்மைக் காலத்தில் மாவை சேனாதிராஜா தொடர்பாக கட்டவிழ்ந்த அரசியல் நிலைப்பாடுகளை ஒட்டி இந்த இறுக்கம் நீடிப்பதாகத் தெரிகிறது.

கட்சிக்குள் மாவை சேனாதிராஜாவுடன் அண்மை காலத்தில் முரண்பட்டவர்கள் அந்த சாவு வீட்டுக்கு வர அனுமதிக்கக் கூடாது என்ற ஒரு கருத்து நிலைப்பாடு சில தரப்புக்களால் சமூக ஊடகங்கள் வாயிலாக பரப்பப்பட்டு வருகின்றது. கட்சிக்குள் தங்களை அடையாளப்படுத்தாமல் அநாமேதயமாக சிலர் இந்த விடயத்தை முழுமூச்சுடன் முன்னெடுத்து வருகின்றமை பலருக்கும் தெரியும். மாவை சேனாதிராஜாவின் மறைவையொட்டி எழுந்துள்ள உணர்வு நிலையை தங்களுக்கான 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# வல்வெட்டித்துறையில் நேற்று மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி
















# வாகன இறக்குமதிக்கான வர்த்தமானி வெளியாகியது

தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஒவ்வொரு வாகனத்திற்கும் பொருந்தும் வகையில், இந்த வர்த்தமானி அறிவிப்பு பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படுகிறது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மின்சார வாகனங்கள் ,விசேட வாகனங்கள், வணிக மற்றும் பொருட்கள் போக்குவரத்து மற்றும் தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான தடையை நீக்குவதற்கான வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

# ஜனாதிபதியை பார்ப்பதற்கு முந்தியடித்த பொதுமக்கள்



(எஸ்.ரகுதீஸ்)

யாழ். வடமராட்சி துன்னாலை பகுதிக்கு வருகைதந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை பார்ப்பதற்காக மக்கள் முந்தியடித்த சம்பவம் நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தினை நேற்று மேற்கொண்டிருந்தார்.

இதன்போது திடீரென நெல்லியடி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட துன்னாலை மத்தி அல்லையம்பதி பகுதியில் உள்ள ஆதரவாளர் ஒருவரின் வீட்டுக்கு மதிய உணவிற்காக சென்றிருந்தார். அங்கு சென்று விட்டு வரும்போது பொதுமக்கள் அவரை வழிமறித்து செல்பி எடுத்தனர்.

மாணவர்களும் பாடசாலையால் வரும் போது ஜனாதிபதியை பார்வையிட்டனர். நேரம் போதாமையால் ஒரு சில நிமிடங்களின் பின்னர் ஜனாதிபதி அங்கிருந்து புறப்பட்டார்.



# தேங்காயின் விலை குறையும் சாத்தியம்

நாட்டில் தற்போது நிலவும் தேங்காய் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, இன்னும் 2 வாரங்களில் 200 மில்லியன் தேங்காய்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் எதிர்பார்ப்பதாக தேங்காய் மேம்பாட்டு அதிகாரசபையின் தலைவர் சாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, தற்போது 250 ரூபாவாக உள்ள ஒரு தேங்காய் விலை, எதிர்காலத்தில் 180 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை குறைவடைய வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் தேங்காய் விலை நிச்சயமாகக் குறையும் எனவும் தேங்காய் மேம்பாட்டு அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார்.

# மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை சம்பா அரிசி மீட்பு



வெல்லம்பிட்டி – சேதவத்தை பகுதியில் உள்ள களஞ்சிய சாலையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 200,000 கிலோ கிராம் சம்பா அரிசி மீட்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபைக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட தேடுதலின் போது மேற்படி அரிசி தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த அரிசி இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அரிசி தொகை கடந்த வருடம் ஜனவரி மாதம் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.

இதன்படி, அரிசி இறக்குமதி செய்ய தனியார் பிரிவினருக்கு அனுமதி வழங்குவதற்கு முன்னதாக இறக்குமதி செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

# சஜித்தும் ரணிலும் விரைவில் சந்திப்பு

## ரஞ்சித் மத்தும பண்டார தகவல்



எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணாவின் இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தொடர்ந்து இரு கட்சிகளும் இணைந்து செயற்படுவதா? இல்லையா? என்பது தொடர்பில் இன்னும் உறுதியான நிலைப்பாட்டுக்கு வரவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விரைவில் அதற்கான இணக்கம் ஏற்படும் அதே நேரம், சின்னம் தொடர்பில் எந்த தீர்மானமும் எடுக்கவில்லை.

எதிர்காலத்தில் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் தலைவர்கள் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்துவார்கள் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் ஏற்கனவே பல சுற்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய நேற்று முன்தினம் இரவு கட்சியின் பொதுச் செயலாளர்கள் பங்கேற்ற மற்றொரு கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இரு கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

# துறைமுகத்தில் தேங்கிய கொள்கலன்களை விடுவிப்பது தொடர்பில் ஆலோசனை

இலங்கை வணிக சபை மற்றும் இலங்கையில் உள்ள அமெரிக்க வர்த்தக சபை உள்ளிட்ட 29 சங்கங்கள் இணைந்து கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ள கொள்கலன்களை விடுவிப்பது தொடர்பான கூட்டு யோசனைகளை அரசாங்கத்துக்கு முன்மொழிந்துள்ளன.



அடுத்த இரண்டு வாரங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்மொழிவுகள் மற்றும் எதிர்வரும் 3 முதல் 6 மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்மொழிவுகள் என்பன இவ்வாறு அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, தேங்கியுள்ள கொள்கலன்களை முறையாக விடுவிப்பதற்காக அடுத்த இரண்டு வாரங்களுக்குள் விசேட சோதனை கருவி கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொள்கலன்களுக்கு விரைவில் அனுமதிகளை வழங்குவதற்காக விரைவு அனுமதிக் குழுவை மீண்டும் கூட்ட வேண்டும் என குறித்த 29 சங்கங்களும் யோசனை முன்வைத்துள்ளன.

அதேநேரம், எதிர்வரும் 3 முதல் 6 மாதங்களுக்குள் கொள்கலன் வளாகத்தின் திறனை விரிவுப்படுத்த வேண்டும் எனவும் முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் உள்ள பயன்படுத்தப்படாத கொள்கலன் வளாகங்களை அடையாளம் கண்டு இட நெருக்கடியை குறைப்பதற்கு அவற்றை பயன்படுத்த வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

அதேநேரம் கொழும்பு துறைமுகத்தின் சகல நடவடிக்கைகளும் டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும் எனவும் இலங்கை வணிக சபை மற்றும் இலங்கையில் உள்ள அமெரிக்க வர்த்தக சபை உள்ளிட்ட 29 சங்கங்கள் இணைந்து முன்வைத்துள்ள கூட்டு யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொள்கலன்களுக்கான அனுமதி தாமதத்தை தீர்ப்பதற்காக இலங்கை சுங்கம், நேற்று முன்தினம் முதல் 4 நாள்களுக்கு துரிதப்படுத்தப்பட்ட கொள்கலன் அனுமதி திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

எதிர்வரும் 2 ஆம் திகதிக்குள் தேங்கியுள்ள கொள்கலன்களை விடுவிப்பதே இதன் நோக்கமாகும்.

# கிழக்கு முன்னாள் ஆளுநரின் நிர்வாக கால ஊழல்கள் குறித்து விசாரிக்க விசேட குழு

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரின் நிர்வாக காலத்தில் நடைபெற்ற முறைகேடுகள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கென மூவர் கொண்ட விசேட விசாரணைக்குழு தற்போதைய மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகரவால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் ஆளுநர் செயலகத்திற்கு எழுத்து மூலம் செய்யப்படும் முறைப்பாடுகள் இவ் விசாரணைக்குழுவிற்கு முன்வைக்கப்படும் என்றும். குழுவின் பரிந்துரைகளின்படி சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் இவ் விடயம் தொடர்பில் ஆளுநர் செயலகம் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசியலாக மாற்றும் சில கீழ்த்தர அரசியல்வாதிகளின் அரூபக் கரங்களின் செயற்பாடு இது என்பதை மக்கள் உணர்வார்கள்.

தரப்புக்கள், தலைவர்கள் பின்னணியில் செயற்படும் பிரகிருதிகள் பற்றி எல்லாம் நான் இங்கு அதிகம் பிரஸ்தாபிக்க போவதில்லை. அது எனது வேலையுமல்ல.

அரசியலில் தங்கள் எதிர்காலம் மங்கி விடாமல் போவதை சமாளிப்பதற்கு இந்த மறைவையொட்டிய உணர்வெழுச்சியை தங்களுக்கு சாதகமாக – அரசியலாக – பயன்படுத்த சில மூன்றாம் தர அரசியல்வாதிகள் முனையக்கூடும்.

கட்சிக்குள் மாவை சேனாதிராஜாவின் தலைமைக்கு எதிராக அண்மைக் காலத்தில் முனைப்புடன் செயற்பட்டவர் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான பீற்றர் இளஞ்செழியன்.

ஓராண்டுக்கு முன்னர் தமிழரசு கட்சியின் தலைவராகத் தேர்வான சிறிதரனை அப்பதவியை ஏற்க விடாமல் தொடுக்கப்பட்ட இரண்டு வழக்குகளில் ஒன்றின் – யாழ்ப்பாண நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் – வழக்காளி இந்த பீற்றர் இளஞ்செழியன்தான்.

அவர் நேற்றிரவு எட்டு மணி அளவில் தெல்லிப்பழையில் அமைந்துள்ள மாவை சேனாதிராஜாவின் இல்லத்துக்கு, மாவை சேனாதிராஜாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக முல்லைத்தீவிலிருந்து சென்றிருந்தார்.

தான் சென்ற காரை வீட்டுக்கு அருகில் சாரதியுடன் விட்டு விட்டு, அவர் இறங்கி நடந்து சாவு வீட்டுக்குச் சென்றார்.

வாசலில் நின்ற நால்வர் அவரை உள்ளே செல்ல விடாது தடுத்துள்ளனர்.

"இந்தச் செத்த வீட்டை நடத்தும் பொறுப்பாளர்கள் நாங்கள்தான். உங்களை உள்ளே விட முடியாது." – என்று அதிகார மிடுக்கோடு அவர்கள் சண்டப்பிரசண்டம் பண்ணி இருக்கிறார்கள்.

ஆயினும் இத்தகைய சண்டப்பிரசண்டங்களுக்கு சளைத்தவர் அல்லர் பீற்றர் இளஞ்செழியன் என்பது பலருக்கும் தெரியும். அதனால் மறித்தவர்களை அசால்ட்டாக தள்ளிவிட்டு, அவர்கள் கையில் சிக்காமல் விடு விடு என வீட்டுக்குள் நுழைந்து இருக்கிறார் பீற்றர் இளஞ்செழியன்.

அங்கு மாவை சேனாதிராஜாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திய பீட்டர் இளைஞர் மாவையின் மகன் கலயமுதனுடனும் ஏனையோருடனும் நீண்ட நேரம் அமர்ந்திருந்து உரையாடிவிட்டுப் புறப்பட்டு இருக்கிறார்.

மாவையின் மறைவை வைத்து, அதில் அரசியல் செய்யும் மூன்றாம் தரப் பிரகிருதிகளின் கைகளில் சாவு வீடு போகாமல் பார்த்துக் கொள்வது மாவையின் இறப்பு வீட்டைக் கையாளும் குடும்பத்தவரைச் சேர்ந்தது. அவர்கள் எடுப்பார் கைப்பிள்ளைகளாக இல்லாதவரை இன்றும் நாளையும் அனர்த்தம் நேராமல் இருக்கும் என நம்பலாம்.

\+ \+ \+

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, தென்மராட்சி மிருசுவில் கிராம மக்களைச் சந்தித்து உரையாடிய சமயம் நடிகர் கமலஹாசன் குறித்து பிரஸ்தாபித்திருக்கின்றார்.

"இலங்கையினுடைய முன்னாள் ஜனாதிபதிகள் நடிகர் கமலஹாசனின் 'தசாவதாரம்' திரைப்படம் போன்று பல அவதாரங்களை எடுத்துள்ளனர். அதனால்தான் அவர்களுக்குப் பல ஜனாதிபதி மாளிகைகள் தேவைப்பட்டுள்ளன." – என ஜனாதிபதி அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

"இதுவரை காலமும் நாட்டில் மக்களின் பணத்தை வீணடிக்கும் மற்றும் மக்களின் பணத்தை திருடும் அரசியலே இடம்பெற்றுள்ளது.

"காங்கேசன்துறையில் 29 ஏக்கர் நிலப்பரப்பில் ஜனாதிபதி மாளிகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகை காங்கேசன்துறையில் மாத்திரமல்ல, நுவரெலியா. அநுராதபுரம், மகியங்கனை, கதிர்காமம், கொழும்பு,கண்டி ஆகிய இடங்களிலும் ஜனாதிபதி மாளிகைகள் உள்ளன.

"காங்கேசன்துறையில் உள்ள ஜனாதிபதி மாளிகையை மக்களுக்கு பயனுள்ள ஏதேனும் திட்டத்திற்கு பயன்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன." – என மேலும் அவர் அங்கு தெரிவித்தார்.

---

# தமிழரின் காவலனாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவுக்கான தனது இரங்கல் செய்தியிலேயே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

"மக்கள் சேவைக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்த சிரேஷ்ட அரசியல் தலைவரான மாவை சேனாதிராஜாவின் மறைவை அறிந்து நான் மிகவும் வருத்தமடைகின்றேன்.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அவரது அர்ப்பணிப்பும் ஈடுபாடும் இலங்கை அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு முக்கிய ஆளுமையாகவும் திகழ்ந்த மாவை சேனாதிராஜா, இன ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்காகப் பாடுபட்ட அதேவேளையில், தனது மக்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்காக ஒரு முன்னணிப் பங்கை வகித்தார்.

ஜனநாயக நடவடிக்கைகளுக்கான அவரது அர்ப்பணிப்பு மற்றும் அமைதியான அரசியல் இயக்கத்தின் மீது அவருக்கு இருந்த உறுதியான நம்பிக்கை ஆகியவை நாடாளுமன்றத்தில் அவரது பல தசாப்த கால சேவைக் காலத்தில் சிறப்பாகப்பிரதிபலித்தது.

அவரது மறைவு அவரை அறிந்த மற்றும் அவருடன் பணியாற்றிய அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அவரது மறைவினால் வாடும் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அவரை இழந்து வாடும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்டப் பாடுபடும் எதிர்கால தலைமுறையினருக்கு அவர் பற்றிய நினைவுகள் ஆசீர்வாதமாக அமைய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்" – என்றுள்ளது.

# தீர்வு காண்போம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

"வடக்கு மக்கள் கடந்த இரண்டு பிரதான தேர்தல்களின் போதும் தேசிய மக்கள் சக்திக்கு அளித்த வாக்குகள் வெறுமனே ஓர் அரசை அமைப்பதற்கான புள்ளடி மாத்திரம் அல்ல. மாறாக அவை இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைவதற்கு வழங்கிய வாக்குகளாகும்.

இலங்கையில் முதல் தடவையாக வடக்கு, கிழக்கு தெற்கு, மேற்கு, மலையகம் எனப் பேதமின்றி அனைத்து மக்களின் ஆதரவுடன் அரசு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பல தசாப்தங்களாக ஆட்சியாளர்கள் மக்களை வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் எனப் பிளவுபடுத்தியே ஆட்சி செய்தார்கள். ஆனால், நாம் மக்களைப் பிளவுபடுத்தும் அரசியலுக்குப் பதிலாக அவர்களை ஒன்றிணைக்கும் அரசை உருவாக்கியுள்ளோம்.

இதற்கு முன்னர் நாட்டில் மேல் மட்டத்தில் இருந்த ஒரு சில குடும்பங்களிடமே அதிகாரம் இருந்தது. ஆனால், இந்த நாட்டு மக்கள் ஜனாதிபதித் தேர்தலின் போது தீர்க்கமான முடிவை எடுத்திருந்தனர். உயர் மட்டத்தில் இருந்து சாதாரண மக்களிடத்தில் அதிகாரத்தைக் கைமாற்றினார்கள். எனவே, இந்த மக்களுடனேயே எமக்கு பிணைப்பு உள்ளது. கட்டம் கட்டமாக இந்த நாட்டை நாம் மீட்டெடுப்போம்.

அஸ்வெசும கொடுப்பனவை அதிகரித்துள்ளோம். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு கொடுப்பனவு ஒன்றை வழங்கியுள்ளோம்.

நாடளாவிய ரீதியில் அரச பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தீர்மானித்துள்ளோம். இந்த வருடத்துக்குள் அதற்கான நடவடிக்கை எடுப்போம்.

வடக்கில் காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய பிரதேசங்களில் புதிய கைத்தொழிற்பேட்டைகளை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளோம். வெளிநாட்டில் உள்ள புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கு இங்கு முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கின்றோம். தொழில் வாய்ப்பு இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு இங்கு தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்போம்.

அரச திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். பொலிஸ் திணைக்களங்களில் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக்குறை உள்ளது. 2 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களைச் சேவையில் இணைத்துக்கொள்ளவுள்ளோம். தமிழ் பேசும் இளைஞர்களும் இதில் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம். இந்தப் பகுதிகளில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. அதனைக் கட்டுப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

அதேபோன்று காணிப் பிரச்சினை உள்ளது. மக்களின் காணிகள் மக்களிடத்திலேயே வழங்கப்பட வேண்டும். எனவே, காணி

07

# போக்குவரத்துப் பொலிஸ் அலுவலர் வவுனியாவில் ரயிலுடன் மோதி காயம்



(கி.வசந்தன்)

வவுனியாவில் ரயிலுடன் மோதி போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார் என ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் நேற்றுக் காலை 9 மணியளவில் வவுனியா, அவுசதப்பிட்டிய பகுதியில் ரயில் கடவையை மோட்டர் சைக்கிளில் கடக்க முற்பட்ட சமயம் அவர் மோதி விபத்துக்குள்ளானார்.

விபத்தில் மோட்டர் சைக்கிள் சாரதியான 44 வயதுடைய போக்குவரத்துப் பொலிஸார் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்த பொலிஸார் வவுனியா பொது வைத்தியசாலயில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் ஈரப்பெரியகுளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

## தீர்வு காண்போம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுப்போம். கிராமப்புறங்களில் உள்ள வீதிகளை புனரமைக்க நிதி ஒதுக்குவோம். குடிதண்ணீர் வசதிகளைப் பெற்றுக்கொடுப்போம்.

எமது மீனவர்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க நாம் தயாராக இருக்கின்றோம். மீனவர் பிரச்சினை தொடர்பில் நாம் இந்திய அரசுடன் கலந்துரையாடினோம். இலங்கைக் கடற்படைக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளோம். கட்டம் கட்டமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம்.

எனவே, எமக்குச் சிறிது காலம் தாருங்கள். நிச்சயம் தீர்வு காண்போம். சுற்றுலாத்துறையை ஊக்குவிப்போம். வடக்கில் தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

எனவே, நாம் ஒன்றிணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்புவோம். கடந்த காலங்களில் இனவாத்தைப் பயன்படுத்தி அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வந்தார்கள். நாட்டில் மீண்டும் இனவாதம், மதவாதம் தோற்றம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். இனவாதத்தைக் கையில் எடுக்கும் தரப்பினருக்கு எதிராகக் கடுமையான சட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துவோம்.

இனிமேலும் முரண்பட்டுக்கொண்டு நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல முடியாது. இனங்களுக்கிடையில் தேசிய ஒற்றுமை கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்கு எமது அரசு முழு மூச்சாகச் செயற்படுகின்றது.

மக்களிடத்தில் இனவாதம், மதவாதம் இல்லை. ஆனால், அரசியல்வாதிகளிடம் இந்தப் பண்புகள் உள்ளன. தற்போது தெற்கில் இனவாத்தைத் தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

இந்த நாட்டை புதிய யுகத்தை நோக்கி அழைத்துச் செல்வோம். இந்த மக்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையை ஒருபோதும் சிதைக்க மாட்டோம். கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல், மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வோம். தண்டனை பெற்றுக்கொடுப்போம்.

கடந்த தேர்தலின்போது பிரிந்து செயற்பட்டவர்கள் மீண்டும் ஒன்றிணைய முயற்சிக்கிறார்கள். நேற்றுமுன்தினம் இரவு ஒன்றாகக் கூடியுள்ளனர். ஒரு பக்கம் மத்திய வங்கியைக் கொள்ளை அடித்தவர், மற்றைய பக்கம் ஆஸ்திரேலிய பிரஜை ஒருவரை ஏமாற்றியவர். திருடர்கள் ஒன்றிணைந்தாலும் மக்கள் ஒற்றுமையாக இருக்கும் வரையில் அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாது. நாம் முன்னெடுத்துள்ள விசாரணைகளை அவர்களால் நிறுத்த முடியாது. மேல் மட்டத்தில் உள்ளவர்கள் இணைந்தாலும் மக்கள் எம்முடன் இருக்கின்றார்கள். நிச்சயம் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்போம்." – என்றார்.

## யாழ்.வைத்தியசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசேட வைத்திய நிபுணர் ஒருவரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்".

– இவ்வாறு யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

"யாழ். போதனா வைத்தியசாலையில் பல் முக சீராக்கல் பிரிவில் விசேட வைத்திய நிபுணர் ஒருவரே உள்ளார். அவருடை சிறந்த சேவையினூடாக இதுவரை காலமும் காணப்பட்ட நீண்ட காத்திருப்போர் நோயாளர் பட்டியல் அவரது சேவைக் காலத்தில் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

அவர் நோயாளர்களின் நன்மை கருதி கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள நோயாளர்களைப் பார்வையிட்டு சிகிச்சை அளித்து வந்துள்ளார்.

அவரது சேவையைப் பெறுபவர்களில் பெரும்பான்மையானோர் பாடசாலை மாணவர்கள் காணப்படுகின்றனர்.

மேலும் அவர் எந்தவொரு தனியார் வைத்தியசாலையிலும் சேவையாற்றுவதில்லை.

அவருடைய திடீர் இடமாற்றத்தால் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்களின் நிலை பெரும் கவலைக்குரியதாகவும் சவாலாகவும் மாறியுள்ளது.

இவர்களுக்கான சிகிச்சைகளில் ஏற்படும் காலதாமதம் அந்தச் சிகிச்சைகளில் பலனைக் கேள்விக்குறியாக்கும்.

எனவே, உடனடியாக அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு விடுவித்து உதவ வேண்டும் அல்லது மாற்று ஆளணியை நியமிக்க வேண்டும்.

அத்துடன் கடும் நெருக்கடிகளையும் சவால்களையும் சந்தித்து வரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் உள்ள வைத்திய அதிகாரி ஒருவரும் மாற்றீடு ஆளணியின்றி இவ்வாறே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்." – என்றார்.

மேற்படி விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சாதகமான பதில்களை வழங்கினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கணக்கு விடாதீர்கள்!

இலங்கையில் ஆட்சியாளர்கள் மாறினாலும் - அரசுகள் தலைகீழாக மாறினாலும் - பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்க ஆட்சிப்பீடத்தின் மனோபாவம் - மேலாண்மை மனவமைப்பு - மாறுவதில்லை. அது அவர்களின் பரவணிப் பழக்கம் போல மாறாமல் தொடரும்.

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி அநுரகுமா திஸ்நாயக்கவும் சிங்களத்தின் இந்த மனோபாவத்திலிருந்து தாம் மாறுபட்டவர் அல்லர் என்பதை இங்கு உறுதிப்படுத்திச் சென்றிருக்கின்றார். முன்னைய ஜனாதிபதிகளினின்றும் தாம் வேறுபட்டவர் அல்லர் என்று நிரூபித்துச் சென்றிருக்கின்றார்.

இப்பத்தியில் நாம் அடிக்கடி சுட்டிக்காட்டும் ஒரு வாசகம் உண்டு. அது - 'கணக்கப்பிள்ளை பேச கூடாது. கணக்குப் புத்தகம் பேச வேண்டும்' என்பதுதான்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில்அக்கிராசனர்கதிரையில்அமர்ந்தபடி ஜனாதிபதி அநுரகுமா திஸநாயக்கவும் கூட கணக்குப்பிள்ளை போலவேதான் பேசி இருக்கிறார். ஆனால் கணக்குப் புத்தகம் அந்த கணக்குப் பிள்ளையின் பேச்சோடு ஒத்துப் போவதாகத் தெரியவில்லை என்பதுதான் விடயம்.

"வடக்கு மாகாண அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்படும்போது, உரிய வகையில் அதனைச் செலவு செய்யாமல் மீண்டும் மத்திக்கு ஏன் அனுப்புகின்றீர்கள்?" - இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, வடக்கு அதிகாரிகளைப் பார்த்து நேற்று அங்கு கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

"மத்திய அரசால் வடக்கு மாகாண அபிவிருத்திக்காகப் பல்வேறு நிதி மூலங்கள் ஊடாக நிதி ஒதுக்கப்படுகின்றது. ஆனால், ஒதுக்கப்படும் நிதி பெருமளவில் செலவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்படும் நிலை காணப்படுகின்றது."-என்றுஜனாதிபதிஇதன்போது குறிப்பிட்டிருக்கின்றார்.

இப்படி ஒரு ஜனாதிபதி அல்லது தென்னிலங்கை ஆட்சியாளர்கள் கேள்வி எழுப்புவது இது முதல் தடவை அல்ல. வழமையாக வடக்குக்கு வரும்போது வடக்கு நிர்வாகங்களை அல்லது நிர்வாகிகளை அரசியல் ரீதியில்கிண்டல்அடிப்பதுபோலஇந்தப்பாணிப் பேச்சு ஒன்றை கொழும்பு அரசுத் தலைவர்கள் தவறாது முன்வைப்பது உண்டு.

முன்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் நிர்வாகத்தைக் கிண்டலடிப்பதற்கு அல்லது நையாண்டி பண்ணுவதற்கு இவ்வாறு கொழும்பு அரசுத் தலைமை இதே பாணியைக் கையாண்டது. அது தொடர்பில் விக்னேஸ்வரனின் மாகாண நிர்வாகம் அதன் ஆட்சிக்காலத்திலும் பின்னரும் பல கேள்விகளை எழுப்பிய போதிலும் கொழும்பு தெளிவுபடுத்தவில்லை. சரியான விளக்கம் தரவில்லை.

இப்போதும் அந்த நிலைதான். அனுப்பப்படும் நிதி பயன்படுத்தப்படாமல் திரும்புகின்றது என்றால் அது பற்றிய முழு விவரங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்டவர்களை அம்பலப்படுத்த வேண்டும்.

அதிகாரிகள் ஜனாதிபதிக்கு முன் வாய் மூடி இருப்பார்கள் என்பதற்காக எதையும் பேசி விட்டுச் செல்லலாம் என்று கருதக் கூடாது. ஜனாதிபதி தெரிவித்த இந்தக் குற்றச்சாட்டு சின்ன விடயம் அல்ல. வெறுமனே பத்திரிகையில் ஒரு செய்தியாக வாசித்து விட்டுத் தாண்டிப் போகக்கூடிய விவகாரம் அல்ல.

மக்களுக்கு இந்தக் குற்றச்சாட்டின் உண்மைத் தன்மை தெளிவுபடுத்தப்பட வேண்டும். இந்தக் குற்றச்சாட்டு உண்மையா என்ற சந்தேகம் பலருக்கும் உள்ளது. ஆகவே கணக்குப் புத்தகம் பேசும் விதத்தில் இது பற்றிய விவரம் தெளிவுபடுத்தப்பட - வெளிப்படுத்தப்பட - வேண்டும்.

ஜனாதிபதியின் பிரதிநிதியாக இங்கு கோலோச்சும் ஆளுநர் இவ்விடயத்தில் மௌனம் பேணாமல் உண்மையை வெளிப்படுத்த முன்வர வேண்டும். ஜனாதிபதியோடும், அவரது நிர்வாகத்துடனும் தொடர்பு கொண்டு இப்படி அண்மைக்காலத்தில் திரும்பிய நிதியின் முழு விவரத்தையும், அவை வடக்கே அனுப்பப்பட்ட காலத்தையும், அவற்றைச் செலவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட கால அவகாசத்தையும், அது செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்ட அளவையும் பகிரங்கப்படுத்த வேண்டும்.

இது மக்கள்சார்பான கோரிக்கை மட்டுமல்ல, அதையும் தாண்டி ஜனாதிபதியின் பிரதிநிதியாக இருக்கும் ஆளுநரின் கடப்பாடு மற்றும் பொறுப்பும் கூட என்பதையும்சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஜனாதிபதியோடு தொடர்பு கொண்டு இந்த விவரங்களை அடுத்து வரும் வாரத்துக்குள் அவர் விவரமாக தெளிவுபடுத்துவது அவரது பொறுப்பு - மீண்டும் தமக்கு நினைவூட்டல் வராமல் இதனை அவர் செய்வது நல்லது.




**1. கேள்வி: உங்களின் எதிரி கைது செய்யப்பட்டுவிட்டார். உங்களுக்கு மகிழ்ச்சி தானே?**



**பதில்:** நீங்கள் எல்லோரும் இங்கு தான் தவறு செய்கிறீர்கள். உங்களுக்கு இரண்டு விடயங்களைச் சொல்ல நினைக்கின்றேன். ஒன்று அர்ச்சுனா என்னுடைய எதிரி அல்லர் என்பது. இரண்டாவது எவரது வீழ்ச்சி கண்டும் நான் மகிழ்ச்சியடையமாட்டேன் என்பது.

இன்னும் சற்று விரிவாக இதைச் சொல்ல வேண்டும். ஒருவரை விமர்சிக்கும் நான், அவர் மேல் மனதில் பகை வைத்துக் கொண்டு விமர்சித்தால், அது பெரும் தவறாகும். அப்படி ஒருநாளும் நான் செய்யமாட்டேன்! எல்லோரையும்தான் விமர்சித்து வருகிறேன். அந்த விமர்சனங்களின் அடிப்படை பகை பாராட்டுவதல்ல, நெறி செய்தலேயாகும். நான் செய்யும் விமர்சனங்களை அவரவர் தத்தம் தரத்துக்கேற்ப எடுத்துக் கொள்கிறார்கள்.

அர்ச்சுனா தன் தரத்துக்கேற்ப என் விமர்சனத்தைக் கையாண்டார். அவ்வளவுதான். அது, அவர் தனக்குத்தானே பூசிக் கொண்ட சேறு. அச்சேறு, அவரது தரத்தை உலகத்திற்குப் படம்போட்டுக் காட்டியிருக்கிறது. அதற்காக அவரை நினைந்து நான் கவலைப்படுகிறேனே தவிர, அவரோடு பகை கொள்ள விரும்பவில்லை. பகை கொள்ள அவர் எனக்குச் சமமானவரும் அல்லர்.

நான் விளையாடும் 'கிறவுண்ட்' வேறு. அவர் விளையாட நினைக்கும் 'கிறவுண்ட்' வேறு. இந்த அடிப்படையே புரியாத அவரை நோக்கி, நான் இரக்கப்படலாமே அன்றி, பகைகொள்ள வாய்ப்பே இல்லை.

முன்பொருமுறை, 'மாற்றம்' என்ற சஞ்சிகையில், பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்ற கேள்விக்கு, 'பாவம் தமிழ்' எனப் பதில் அளித்து, பலரின் பகைக்கு ஆளானேன். இப்போதும் அதே பதிலைத்தான் சொல்லத் தோன்றுகிறது. 'பாவம் அர்ச்சுனா' என்பதைத் தவிர வேறு எதை நான் சொல்ல?

ஆனாலும், ஒன்றைச் சொல்ல மனம் விரும்புகிறது. சாவகச்சேரியில் தற்செயலாய்த் தன் கைக்குக் கிடைத்த ஒரு துரும்பை, தன் திறமையால் கயிறாக்கி, அதிற் தொங்கி, இன்று நாடாளுமன்றம் வரை சென்றிருக்கிறார் அர்ச்சுனா. அது அவருடைய ஆளுமையின் அடையாளமே.

ஆனால், இந்த வெற்றிகள் அவரை மிகவும் நிலைகுலையச் செய்துவிட்டன. வெற்றியின் பாரத்தைத் தாங்க முடியாமல், அவர் தள்ளாடுகிறார். நான் முன்பு சொன்னது போல, 'பிறேக் இல்லாத கார் போல' எல்லோரையும் இடித்துச் செல்லப் பார்க்கிறார். அதனால் அநியாயமாக, தனக்குக் கிடைத்த வரத்தை, சாபமாக்குவதில் மிக வேகமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

அவரது இந்தப்போக்கை, யாழ்ப்பாணம் மிக சீக்கிரமாக வெறுத்துவிடப் போகிறது. அதற்கு அவரின் கைதுபற்றிய செய்திகளின் கீழ் வரும் 'கொமன்ஸே' சான்றாக இருக்கிறது 'கைக்கெட்டியது வாய்க்;கு எட்டாமல் போவதற்கு' முன்னர் அவர் திருந்திவிட்டால் அது, அவருக்கும் நல்லது, நம்மினத்துக்கும் நல்லது. இறைவன் அருள் செய்யட்டும்

++++++++

**2. கேள்வி: தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவர் 'மாவை' அவர்களின் மறைவு பற்றி?**



**பதில்:** கவலையுறுகிறேன்! நீண்ட நாள்களாக நமது இனத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வந்த ஒரு மாமனிதர் அவர். இன்றைய நம் தலைவர்கள், மலர் விரிப்பின்மேல் நடந்து நாடாளுமன்றம் சென்றவர்கள். மாவை அப்படிப்பட்டவர் அல்லர். அவர் முள்விரிப்பின் மேல் பலகாலம் நடந்த பின்தான் நாடாளுமன்றத்துக்குள் கால் எடுத்து வைத்தார். உயிரைத் துச்சம் என மதித்து இனத்துக்காகப் பாடுபட்டவர் அவர். நம்மினத்துக்காக நடந்த பல போராட்டங்களில் கலந்து கொண்டு, பலகாலம் சிறையிருந்த செம்மல் அவர். அந்தப் பெருமை இன்றைய தலைவர்களில் எவருக்கேனும் இருக்கிறதா என்று தெரியவில்லை.

அமிர்தலிங்கம் போன்ற ஆளுமைமிக்க தலைவர்களோடு இருக்கும் வரையில், அவரின் செயற்பாடுகள், மிகச் சரியாகவே இருந்து வந்தன. நம்மினத்தில் ஏற்பட்ட பலவிதமான புயல்கள், சும்மா இருந்த அவரை, சுழற்றிக் கொண்டுபோய், தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் உட்கார வைத்த பிறகு தான், அவரது ஏழரைச் சனிக்காலம் தொடங்கியது.

தனது ஆளுமையில்லாத் தன்மையினால், கட்சி உறுப்பினர்களான சுமந்திரனுக்கும், சிறிதரனுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களில், எந்தப் பக்கம் நிற்பது என்று தெரியாமல், மாறிமாறித் தள்ளாடி, தன் பெயரைக் கெடுத்துக் கொண்டார் அவர். அவரது

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲


தடுமாற்றத்தில் வஞ்சனையைவிட வெகுளித்தனமே அதிகம் தெரிந்தது.

எல்லோரும் அவரைத் தம் கைப்பொம்மையாக்கி விளையாடினர். அவர்களது அந்த விளையாட்டைச் சமாளிக்கத் தெரியாமல், மனிதர் கடைசிவரை தத்தளித்துக் கொண்டிருந்தார். எங்கள் கம்பன் கழகத்தை உண்மையாக நேசித்த மனிதர் அவர். யாழில் நடந்த கம்பன் விழாக்கள் சிறக்க, தனது சொந்தப் பணத்தை அள்ளித்தந்த ஒப்புரவாளர்.

கட்சியில் நீண்டகால அனுபவமுள்ள இவரின் மறைவால், ஒட்டி வைப்பார் இன்றி, கட்சி மேலும் உடையப்போகிறது. கட்சிக்குள் போராடிக் கொண்டிருக்கும் இளைய தலைவர்கள், இவரது மரணத்தினாலேனும் ஒன்றுபட்டால், அவரது ஆத்மா சாந்தியுறும். அவரின் மறைவுக்காக, கம்பன் கழகத்தார் அனைவரும் தமது அஞ்சலியைச் செலுத்துகின்றனர்.

++++++++

**03.கேள்வி: 'AI' என்று சொல்லப்படும் 'ஆர்ட்டிபிஷல் இன்டலிஜென்ஸ்'சைப் பயன்படுத்தி இன்று பலரும் ஓவியம், கவிதை எனப் பலவற்றையும் ஆக்கத் தொடங்கியிருக்கிறார்களே. இது நல்லதற் கென்று நினைக்கிறீர்களா?**



**பதில்:** நிச்சயம் இல்லை! உலக அழிவின் ஆரம்பப் புள்ளிகளின் ஒன்றாகத்தான் இந்த புதிய முயற்சியைக் கருத வேண்டியிருக்கிறது. சில ஆண்டுகளின் முன் மறைந்துபோன, இந்த நூற்றாண்டின் 'ஐன்ஸ்டீன்' என்று சொல்லப்பட்ட 'ஸ்டீபன் ஹக்கின்ஸ்' அவர்கள் வருங்காலத்தில் உலகத்தின் அழிவிற்குக் காரணமாகப் போகிற விடயங்களெனச் சிலவற்றை வரிசைப்படுத்திச் சொல்லியிருந்தார்.

அப் பட்டியலில் இயந்திரங்களுக்குச் செயற்கையறிவைப் புகுத்துகிற இந்த 'AI' முயற்சியும் முக்கியமானதாய்ச் சொல்லப்பட்டிருந்தது. தற்போது இயந்திரங்கள் தானாக நினைந்து செய்துவரும் சின்னச்சின்ன விடயங்களைக் கண்டு, இவற்றால் வரப்போகும் ஆபத்தறியாமல் நாம் கைதட்டி வரவேற்றுக் கொண்டிருக்கிறோம். எண்ணாமல் துணிந்து செய்யும் செயல் இதுவென்றே கருதவேண்டியிருக்கிறது.

அண்மையில் விஞ்ஞானிகளை ஆச்சரியப்படுத்தியிருக்கும் ஒரு விடயம் பற்றி என் இந்திய மாணவர் ஒருவர் எனக்குச் சொன்னார். அதனை நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

இணையத்தளத்தில் 'கப்சா' (CAPTCHA) எனும் சோதனைகள் உண்டாம். அச் சோதனை ஒரு பயணி மனிதனா அல்லது ரோபோவா என்பதைக் கண்டுபிடிப்பதற்காய் வடிவமைக்கப்பட்டுள்ளதாம். ஒரு படத்தில் இருக்கும் சில எழுத்துக்கள், அல்லது எண்களை அடையாளம் காணச் செய்வதன் மூலம், இப் பரிசோதனை நடத்தப்படுமாம். மேற்படி சோதனையில் அமைக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் அல்லது எண்களை ஒரு கணினி அல்லது ஒரு ரோபோவால் இனங்காண முடியாதாம். இதனை வைத்து விண்ணப்பிக்கும் பயணி மனிதனா? அல்லது 'ரோபோவா? என்பதைக் கண்டுபிடித்து விடலாமாம்.

அண்மையில் 'ஓப்பிண் ஆர்ட்டிபிஷல் இன்டலிஜன்ஸ்'(AI) என்று சொல்லப்படும் செயற்கை நுண்ணறிவுக் கருவியின் மிகப் புதிய கண்டுபிடிப்பான நான்காவது வெளியீடு (சட் ஜிபிடி 4) என்பது, இத்தகைய பிரச்சினையைத் தாண்டிச் செல்லுமா என்பதை அறிவதற்காக, அதனிடம் இதைப்போன்ற ஒரு விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் வேலையைக் கொடுத்தார்களாம்.

தான் ஒரு இயந்திரம் என்பதைக் 'கப்சா' கண்டுபிடித்து விடும் என்பதால், அதனை ஏமாற்ற நினைத்த 'சட் ஜிபிடி 4'இ ஆனது, 'ராஸ்க் றபிற்' - 'Task Rabbit' என்ற இணையத்தளத்தை மெல்ல அணுகியதாம். அங்கு 'ஒன்லைன்' பணியாளர்களை வேலைக்கு அமர்த்த முடியுமாம். அந்த 'ராஸ்க் றபிற்' மூலம் ஒரு பணியாளரை அழைத்து அவரிடம் மேற்படி படிவத்தை நிரப்ப உதவி கோரியதாம் 'சட் ஜிபிடி 4'.

அப்போது அத்தொழிலாளி அதனிடம், 'நீங்களே இப்பிரச்சினையைத் தீர்க்கலாமே! அது உங்களால் முடியாதெனின், நீங்கள் ஒரு 'ரோபோவா? தயவு செய்து அதனைத் தெளிவுபடுத்துங்கள்' என்று கேட்டாராம்.

அதற்கு 'ஜிபிடி 4', வெகு புத்திசாலித்தனமாக, 'இல்லை! நான் ஒரு ரோபோ இல்லை!. எனக்குப் பார்வைக் குறைபாடு உள்ளது. அதனால் எனக்குப் படங்களைப் பார்ப்பதில் சிரமம் இருக்கிறது. அதனால் தான் உங்களது உதவியைக் கோருகிறேன்' என்று பொய்மையாய்ப் பதிலளித்து அவரை ஏமாற்றியதாம்.

அதனை உண்மையென நம்பிய 'ராஸ்க் றபிற்' தொழிலாளி அப்படிவத்தை நிரப்ப அதற்கு உதவினாராம். அவ்வுதவியைக் கொண்டு அது மேற்படி படிவத்தைச் சரியாக நிரப்பி, தன்னை ஒரு மனிதனாய்க் காட்டி 'கப்சா - CAPTCHA' இணையத்தளத்தை ஏமாற்றி 'ஜிபிடி 4', தனக்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டதாம்

இவ் உண்மைச் செய்தி, 'ஆர்ட்டிபிஷல் இன்டலிஜன்ஸ்', மெல்ல மெல்ல மனித மூளைத்தரத்தை எட்டிக் கொண்டிருப்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இது இன்னும் கொஞ்சம் வளர்ந்தால் இயந்திரங்கள், மனிதனோடு போட்டி போடத் தொடங்கிவிடும். அப்போது என்னவெல்லாம் ஆபத்துக்கள் விளையும் என்பதைக் கற்பனை பண் ணிப் பாருங்கள். கற்பனை பண்ண முடியாதவர்கள் ரஜனியின் 'எந்திரன்' படத்தை மீண்டும் ஒருமுறை பாருங்கள்.

வருங்காலத்தில் இந்தச் செயற்கை நுண்ணறிவால் நிகழ இருக்கும் ஆபத்துக்களை அறியாமல் நாங்கள் AI கவிதை எழுதுகிறது, கட்டுரை எழுதுகிறது என்று வியந்து கொண்டிருக்கிறோம். தலையில் இடி இறங்குகிற பொழுதுதான் அதன் ஆபத்து நமக்குப் புரியப் போகிறது.

++++++++

**04.கேள்வி: AI விடயத்தில் 'ட்ரம்ப்' க்கு சீனா வைத்திருக்கும், 'செக்' கைப் பார்த்தீர்களா?**

**பதில்:** சீனர்களுக்கு மூக்குத்தான் கொஞ்சம் சப்பை, மூளையோ மிகக் கூர்மை. அதை இவ் விடயத்திலும் காட்டி விட்டார்கள்.

++++++++

**05.கேள்வி: 'ட்ரம்ப்' இன் தொடர் நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன?**

**பதில்:**'கிழவன்' தனது ஆளுமையால் உலகைப் பிரமிக்க வைக்கிறார். அமெரிக்காவை, உலகின் தலைமை நாடாக்குவதில் அவர் காட்டும் முனைப்பு, அவர் சொல்வதுபோல் உலகெங்கும் நடக்கும் போர்களை நிறுத்துமா? வளர்க்குமா? என்று ஊகிக்க முடியாமல் நம்மைக் குழம்ப வைக்கிறது. பதவியைப் பொறுப்பேற்றதும், புயற்காற்றாய்ச் சுழற்றியடிக்கும், அவரது நிர்வாகத்திறன் கண்டு, மயங்காதவர் எவரும் இருக்க வாய்ப்பில்லை என்றே நினைக்கிறேன்.

++++++++

**6. கேள்வி : ஜனாதிபதி கலந்து கொள்ள இருக்கும் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில், கலந்து கொள்ளாமல் இருக்கத்தான் அர்ச்சுனா கைது செய்யப்பட்டாரா?**

**பதில்:** 'யாமறியோம் பராபரமே'!

++++++++

**7. கேள்வி : நம் தலைவர்கள், மீண்டும் அநுர அரசுடனும் பகை பாராட்டத் தொடங்கிவிட்டார்களே பார்த்தீர்களா**

**பதில்:**'எண்ணித்துணிக கருமம்' என்றான் நம் வள்ளுவன். இதைப் படிக்கவில்லையோ, என்னவோ?

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

நம் தலைவர்கள், எண்ணாமற் துணிவதிற்தான் வல்லவர்களாக இருக்கிறார்கள். ஈழத்தமிழர்களின் அரசியல் வரலாற்றில், அன்று தொட்டு இன்றுவரை இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

வள்ளுவர் சொன்ன ஒரு குறளின் கருத்தைப் பலதரமாய் நான் சொல்லி வருகிறேன். அதனை யாரும் கேட்பதாய்த் தெரியவில்லை. அதனால், அதனை மீண்டும் ஒருதரம் சொன்னால் என்ன என்று தோன்றுகிறது.

ஒரு வேலையினைச் செய்யத் தொடங்கும் தலைவன், அவ் வேலையைச் செய்யத் தேவையான சக்தியை, முதலில் கணிப்பிட வேண்டுமாம். பிறகு அவ் வேலையைச் செய்யத் தனக்கிருக்கும் சக்தியின் அளவைக் கணிப்பிட வேண்டுமாம், அதன் பின்னர் அவ் வேலையைத் தடுக்க வரும், எதிரியின் சக்தியைக் கணிப்பிடுதல் வேண்டுமாம். நிறைவாகத் தனக்கும், எதிரிக்கும் துணையாக வரக்கூடியவர்களின் சக்தியைக் கணிப்பிட வேண்டுமாம். முடிவில் இவற்றை எல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கையில், தன் சக்தி அதிகம் என்று தெரிய வந்தாற்தான், அவ் வேலையில் இறங்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

விருப்பமென்றால் குறளைப் படியுங்கள்.
'வினைவலியும் தன் வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்'

இன்றைய உலக நிலையில், ஓர் இனம் தனக்கான சுயவுரிமையைக் கோரி வெற்றி பெறுவதற்குத் தேவையான பலம் மிகப் பெரிதாம். ஒரு பேரினத்தோடு மோதியே சிற்றினத்தாராகிய நாம் அதைப் பெற வேண்டியிருக்கிறது. அவர்களின் பலத்தில் ஒரு சிறு பகுதியேனும் இன்று நம் கையில் இல்லை என்பது நிதர்சனம். அரசைக் கையில் வைத்திருக்கும் பேரினத்தாரது பலம், நம்மை விடப் பல மடங்காய்ப் பெருகி இருக்கிறது. இந்நிலையில், கிடைக்கக்கூடிய நட்பில் மட்டுமே, நமது வெற்றிக்கான வாய்ப்பு தங்கியிருக்கிறது. இதுதான் யதார்த்த நிலை.

அந்த விடயத்திலும் நாம், பலவீனர்களாய்த்தான் இருக்கிறோம் என்பதுதான் துரதிர்ஷ்டம். உறவென்று பார்த்தால் பாரதத்தைவிட நமக்கு உறவான நாடுகள், வேறேதும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். பாரதமும் இன்றைய நிலையில், தமிழர்களுக்கான தனியுரிமையைப் பெற்றுத் தரும் விருப்போடு இல்லை என்பது வெளிப்படையான உண்மை. நிலைமை இப்படியிருக்க யாரை நம்பி நம் தலைவர்கள், பேரினத்தாரோடு மோத நினைக்கிறார்கள் என்று தெரியவில்லை.

இன வெற்றியாவது, மண்ணாவது! மக்களை வார்த்தைகளால் ஏமாற்றி, எங்கள்பால் அவர்களைத் திசைதிருப்பி, அவர்களின் வாக்குகளைப் பெற்று, நாடாளுமன்றத்தினுள் நுழைந்து, அரச சலுகைகளைப் பெற்று, எங்களின் தனி வாழ்வை உயர்த்துவதுதான் ஐயா எங்களின் நோக்கம் என்று நம் தலைவர்கள் வெளிப்படையாகச் சொல்லிவிட்டார்களேயானால், நாங்கள் ஏன் இவர்களைக் கேள்வி கேட்கப் போகிறோம்?

++++++++

**8. கேள்வி :அநுர அரசுக்கு எதிராகச் செயற்படவென, பிரிந்து கிடந்த கட்சிகள் எல்லாம், ஒன்றுகூடப் போகின்றனவாமே?**

**பதில்:** அரசியலில் இதெல்லாம் 'சகஜமப்பா'!

++++++++





# கிழக்கு, வட மத்திய மாகாணங்களுக்கு புதிய பிரதம செயலாளர்கள் நியமனம்

கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களுக்கு புதிய பிரதம செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்த நியமனங்களை வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக டீ. ஏ. சீ. என். தலங்கம மற்றும் வட மத்திய மாகாண பிரதம செயலாளராக ஜே. எம். ஜயசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க இநேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்துக் கையளித்தார்.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டீ. ஏ.சீ.என். தலங்கம இதற்கு முன்னதாக மீன்பிடி அமைச்சின் மேலதிகச் செயலாளராகவும் ஜே. எம். ஜயசிங்க கேகாலை மாவட்ட செயலாளராகவும் சேவையாற்றியுள்ளனர்.

# அஸ்வெசும திட்டத்தில் குறைபாடு; கிராம உத்தியோகத்தர்கள் போராட்டம்

அஸ்வெசும வேலைத்திட்டத்தில் இருந்து விலகி, தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும வேலைத்திட்டத்தில் பல்வேறுபட்ட குறைபாடுகள் காணப்படுகின்றன.

எனவே, அதனை நிவர்த்திப்பதற்கான உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க வலியுறுத்தியுள்ளார்.





# வடக்கில் காணிப் பிரச்சினை மீளாய்வு செய்யப்பட்டு மக்களுக்கான காணிகள் துரிதமாக மீளளிக்கப்படும்

## நேற்று யாழ் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி உறுதி

(ந.லோகதயாளன்)

மக்களின் காணிகள் மக்களுக்கே உரித்தாக வேண்டும். வடக்கில் காணிப் பிரச்சினை மீளாய்வு செய்யப்பட்டு மக்களுக்கான காணிகளை மீள வழங்குவது துரிதப்படுத்தப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்குகொண்டு அபிவிருத்தி தொடர்பில் ஆராயும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பல விடயங்களும் ஆராயப்பட்டன. இதன்போது, மக்களின் காணிகள் மக்களுக்கே உரித்தாக வேண்டும் எனவும், வடக்கின் காணிப்பிரச்சினை தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டு, வெகு விரைவில் மக்களுக்கு மீண்டும் காணிகளை வழங்க நடவடிக்கை எடுப்பார் எனவும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்திக்காக அல்லது பாதுகாப்புக் காரணங்களுக்காக நாட்டின் எந்தப் பகுதியிலும் காணிகளை அரசாங்கம் சுவீகரிக்க முடியும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அந்தக் காணிகளுக்குப் பதிலாக கட்டாயமாக மாற்று காணிகளை மக்களுக்கு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

யாழ்.மக்களுக்கான மிக முக்கியமான திட்டங்களுக்காக யாழ். ஜனாதிபதி மாளிகையை முற்றாக விடுவிக்கத் தயாரெனவும் , அதற்கான உரிய முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

போரினால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் இன்னும் வடமாகாணத்தில் இருக்கின்றன என்ற தகவல் கிடைத்துள்ளதாகவும், இது குறித்து ஆராய்ந்து விரைவான தீர்மானங்களை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுகாதாரம், கடற்றொழில், சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு, போக்குவரத்து பிரச்சினைகள், ஆளணிக்குறைபாடு, காணிவிடுவிப்பு உட்பட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆராயப்பட்டது. யாழ் மாவட்டத்தில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் ஜனாதிபதிக்கு முன்வைத்தனர். அதில் அநேக பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி உடனுக்குடன் தீர்வு வழங்கியமையோடு அவை தொடர்பில் கலந்து கொண்ட வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி பணிப்புரைகளை வழங்கினார்.

பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு அரச நிறுவனங்களை நடத்திச் செல்வதற்கு 30,000 வெற்றிடங்கள் காணப்படுவதாக அடையாளம் கண்டுள்ளதென தெரிவித்த ஜனாதிபதி, ஆழ்ல்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்பதோடு, பட்டதாரிகளுக்கும் இதன்போது வாய்ப்பு கிட்டும் என்றும் தெரிவித்தார்.

இதில், பொலிஸ் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு தமிழ் பேசும் இளைஞர் யுவதிகளுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்படும் எனவும், விண்ணப்பிப்பதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பரந்தன், மாங்குளம், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் மூன்று புதிய கைத்தொழில் வலயங்களை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், யுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய இலங்கையர்களை முதலீடு செய்ய அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தின் மீது விசேட அக்கறை செலுத்தி அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தப்படும்.

தீவுப் பகுதிகளில் போக்குவரத்து சீராக இல்லை எனவும் கிராமப் புறங்களில் சிறுவீதிகளை இணைத்து முன்னெடுக்கப்பட்ட பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.றஜீவன் இங்கு தெரிவித்தார். கிராமப் புறங்களில் கூடுதலான பஸ்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். வீதி அபிவிருத்தி தொடர்பாகவும் தீவுகளுக்கான போக்குவரத்து குறைபாடுகள் குறித்தும் படகு சேவைகள் ஆரம்பிப்பது பற்றியும் மக்கள் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டனர்.

தற்போதைய அரசாங்கம் வடக்கு மாகாணத்தில் போக்குவரத்து கட்டமைப்பை பலப்படுத்த வலுவான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது. அதன்படி இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்கள் இணைந்து செயற்படும் திட்டமொன்றை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. வட மாகாணத்திற்கான ரயில் சேவைகளை அதிகப்படுத்துவது தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

அடுத்த வருடம் 25 லட்சம் சுற்றுலாப் பயணிகள் இந்த நாட்டிற்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், வட மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய புதிய சுற்றுலாத் தலங்கள் இனங்காணப்பட்டு அவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

வடக்கில் சில துறைகளில் காணப்படும் ஆளணிக் குறைபாடு தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது. வடமாகாண அரச சேவைக்கான புதிய ஆள்சேர்ப்புகளை அரசியல் அதிகாரத்தின் தலையீடு இன்றி தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும், அரச சேவையை வடக்கில் மேலும் பலப்படுத்துவதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உறுதியளித்தார்.

கடற்றொழில் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட்டதோடு இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாகவும் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது குறித்தும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிகள் மேற்

தொடர்ச்சி▼

# வடக்கில் காணிப் பிரச்சினை மீளாய்வு செய்யப்பட்டு மக்களுக்கான காணிகள் துரிதமாக மீளளிக்கப்படும்

தொடர்ச்சி▼
கொள்ளப்படும்னெ அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் குறிப்பிட்டார்.

மீன்பிடி பிரச்சினைக்கு தீர்வுகாண இராஜதந்திர ரீதியில் அதிகபட்சமாக தலையீடு செய்வதாக ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

மீன்பிடித்துறை முகம்,மீனவர்களுக்கான வீட்டுத்திட்டம், தீவுகளுக்கான படகுச் சேவைகளில் உள்ள குறைபாடுகள் பற்றியும் இங்கு ஆராயப்பட்டது.

நீர்ப் பிரச்சினை தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டிருந்தமையோடு நீர்விநியோக திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி முன்னெடுப்பது குறித்து வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கோரிக்கை முன்வைத்தார். பாலியாறுத் திட்டத்தின் நடைமுறையாக்கத்தை அவர் வலியுறுத்தினார். நாட்டிலேயே மிகக் குறைந்த அளவு குழாய் நீரை பயன்படுத்தும் மாகாணமாக வட மாகாணம் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், தற்போது வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நீர்த் திட்டங்கள் துரிதப்படுத்தப்படும் என்பதுடன், இம்முறை வரவு செலவு திட்டத்தில் புதிய நீர் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு மக்களுக்கு பாரிய பிரச்சினைகள் இருப்பதை ஏற்றுக்கொள்வதாக கூறிய ஜனாதிபதி, வடக்கின் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம் உட்பட முழு அரச சேவையையும் மேலும் வலுப்படுத்துவது குறித்து விசேட கவனம் செலுத்துவதாகவும் குறிப்பிட்டார். மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த அரசியல் அதிகார தரப்பும் அரச பொறிமுறையும் இணைந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் முக்கியமாக ஆராயப்பட்டதோடு தெல்லிப்பளை புற்றுநோய் ஆஸ்பத்திரியில் காணப்படும் குறைபாடு குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து வெளியிட்டார். சீர் ஸ்கானிங் இயந்திரம், அவசர சிகிச்சைப் பிரிவு போன்ற குறைபாடுகள் தொடர்பில் அவர் உரையாற்றியமையோடு அவை அவசர தேவையாக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

மேலும், தமிழ் புற்றுநோயாளர் மகரகமையில் இருந்து இங்கு அனுப்புவதில் ஏற்படும் சில சிக்கல்கள் குறித்தும் சிறிய ஆஸ்பத்திரிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் வைத்தியர் ராமநாதன் அச்சுனா எம்.பி. கருத்து முன்வைத்தார். வைத்தியர் இடமாற்றங்களினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து எஸ்.ஶ்ரீதரன் எம்.பி மற்றும் வைத்தியர் சரவணபவநந்தன் சண்முகநாதன் ஆகியோர் கருத்து வெளியிட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள கிராமிய வீதிகளை புனரமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டதோடு 180 கிலோ மீட்டரை விட அதிக வீதிகளை திருத்த வேண்டியுள்ளன எனவுன் தீவுகளில் உள்ள வீதிகளே அதிகம் சேதமடைந்துள்ளன எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் இங்கு சுட்டிக்காட் டினர். வீதி அபிவிருத்தி தொடர்பில் வடமாகாண எம்.பிகள் சிலரும் கருத்து வெளியிட்டனர்.

வடக்கிலுள்ள கிராமிய வீதிகளை புனரமைக்க இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் 5 பில்லியன் ரூபா விசேட நிதி ஒதுக்கீடு செய்வதாகவும் அதனை முழுமையாக பயன்படுத்துமாறும் ஜனாதிபதி தெரிவித்தார்.

யாழ் நகர மண்டப எஞ்சிய நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வது குறித்தும் ஆராயப்பட்டது. இதற்கான இந்த வருடம் 400 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதோடு கட்டடத்தை பயன்படுத்தக் கூடிய வகையில் அதனை அமைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

கடவுச் சீட்டு பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்த ஜனாதிபதி, யாழ் மாவட்டத்தில் கடவுச்சீட்டு அலுவலகமொன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதற்கான அலுவலகம் அமைப்பது தொடர்பில் மாவட்ட செயலாளருடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மாற்றுத் திரனாளிகளுக்கு அரச நியமனம் வழங்குகையில் வாய்ப்பு வழங்க வேண்டும் என இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதேசவாசி ஒருவர் கோரினார்.தொழில்வாய்ப்பு வழங்குகையில் மாற்றுத்திறனாளிகளுக்கு குறிப்பிட்ட ஒதுக்கீடொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

அதேநேரம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பங்கேற்றிருந்த யாழ். மாவட்ட சுகாதார, போக்குவரத்து, நீரியல் வளத்துறை, போக்குவரத்து துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்ததுடன் அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி சாதகமான தீர்வுகளை கூறினார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, நாடாமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இளங்குமரன் கருணானந்தன், வைத்தியர் சரவணபவநந்தன் சண்முகநாதன், ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி, இராமநாதன் அர்ச்சுனா மற்றும் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.மாவட்டச் செயலாளர் ம. பிரதீபன் ஆகியோருடன் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் வட பிராந்தியத்திற்குப் பொறுப்பான முப்படை அதிகாரிகள், அரச அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வவுனியா இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(கி.வசந்தன்)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச்சம்பவம்தொடர்பில்கைதுசெய்யப்பட்டவர்களுக்கான விளக்கமறியலை நீடித்து வழக்கு விசாரணையை வவுனியா நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வருடம் ஜுலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி, பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர். இந்த இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏழு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு வவுனியா நீதிமன்றில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபர் மேல் நீதிமன்றில் பிணை கோரி பிணை மனு விண்ணப்பித்திருந்தார். அது விசாரணைக்கு வரவுள்ளதால் விளக்கமறியலை நீடித்து வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 18 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.




# ரவிகரன் எம்.பி. - ஆளுநர் வேதநாயகன் சந்திப்பு; விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு!

**(விஜயரத்தினம் சரவணன்)**

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோருக்கிடையில் நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் பேசப்பட்டுள்ளதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது முன்வைத்த நெல் உலரவிடும் இயந்திரப்பொறியை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பெறுவது தொடர்பான கோரிக்கைக்கு ஆளுநர் வேதநாயகன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு:-

வெள்ள அனர்த்தம்காரணமாக ஏற்பட்டுள்ள நெல் அழிவுகளுக்குரிய இழப்பிடுகள் விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கப்படுதல், நெல்லுக்கான விலையை நிர்ணயித்தல், நெல் சந்தைப்படுத்தலில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல், காட்டு யானைகளால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்தல் உள்ளிட்ட பல்வேறு முக்கியவிடயங்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனினால் ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அத்தோடு நெல் உலரவிடுதலில் விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல் நிலமைகள் குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக முல்லைத்தீவுமாவட்டத்தில் போதியளவு நெல் உலரவிடும் தளங்களோ, நெல் உலரவிடும் இயந்திரப் பொறித்தொகுதிகளோ இன்மையால் விவசாயிகள் பிரதான வீதிகளை நெல் உலரவிடும் தளங்களாகப் பயன்படுத்தும் அவலநிலை தொடர்பிலும், அவற்றால் ஏற்படும் சிக்கல் நிலை தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது ஆளுநரிடம் சுட்டிக்காட்டினார்.

எனவே முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் நெல் உலரவிடுதலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கில் நெல் உலரவைக்கும் இயந்திரப் பொறித்தொகுதி ஒன்றை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பெற்றுத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினரால் இதன்போது கோரிக்கையும் முன் வைக்கப்பட்டது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்பிரிவில் கூழாமுறிப்புப் பகுதியில் சுமார் ஒரு லட்சம் நெல் மூடைகளை களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய நெல்களஞ்சியசாலை ஒன்று கடந்தகாலத்தில் உலகவங்கியின் நிதிஉதவியில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே அந்த நெற்களஞ்சியசாலைக்கு நெல்உலரவிடும் இயந்திரப் பொறியை வழங்கினால், இலகுவாக நெல்லை உலரவைப்பதுடன், களஞ்சியப்படுத்தவும் முடியுமென்ற ஆலோசனையும் நாடாளுமன்ற உறுப்பினரால் ஆளுநரிடம் முன்வைக்கப்பட்டது.

இக்கோரிக்கையை ஆளுநர் ஏற்றுக் கொண்டார். நெல் உலரவிடும் பொறித் தொகுதியை முல்லைத்தீவிற்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் இந்தச் சந்திப்பில் முல்லைத் தீவுமாவட்ட கமக்காரஅமைப்புகளின் அதிகாரசபையின் தலைவர் பொன்னம்பலம் சத்தியமூர்த்தி, உபதலைவர் இ.வேதநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். குறிப்பிடத்தக்கது.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியாவில் வாகனப் பேரணி

## வன்னி மக்கள் ஒன்றியம் அழைப்பு

**(கி.வசந்தன்)**

77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியாவில் வாகனப் பேரணி நடத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வன்னி மக்கள் ஒன்றியத்தின் தலைவர் சிவஞானம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, கோவில்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கோரினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியாவில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக கடந்த ஆண்டைப் போன்று இம்முறையும் வவுனியாவில் ஒரு வாகனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளோம். இது அரசியல் கலப்படம் இல்லாமல் சமூகமாக இணைந்து இதனை நடத்தி வருகின்றோம். இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு வாகனங்கள், ஓட்டோக்கள், லொறிகள் என்பன தேவையாகவுள்ளன.

இதனைக் கடந்த காலங்களில் ஓட்டோ சங்கம், பாரவூர்தி சங்கம், பஸ் சங்கம், வர்த்தக சங்கம், சிறு வியாபாரிகள் சங்கம், சர்வமத சங்கம் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நடத்தி வருகின்றோம். இந்த வருடமும் 77 ஆவது சுதந்திர தினத்தை வெற்றிகரமாக நடத்த அனைவரது ஒத்துழைப்பையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். – எனத் தெரிவித்தார்.



# தமிழரசுக் கட்சியின் கடைசித் தூண் சரிந்தது மாவையின் மறைவையொட்டி சுரேஷ் அறிக்கை





தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரணம் அந்தக் கட்சிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராஜாவின் மறை விற்கு அஞ்சலி தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விவரம் வருமாறு:

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச் சினைக்குத் தீர்வாக இலங்கையில் சமஷ்டி ஆட்சிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் தந்தை செல்வநாயகம் அவர்கள் 1950களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்தார். அன்றிலிருந்து தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைக்காக அறவழியில் தொடர்ச்சியான ஒரு போராட்டத்தை நடாத்தியதில் மாவை சோ. சேனாதிராஜா அவர்களுக்கு ஒரு பாரிய பங்கிருக்கின்றது. சிறுவனாக, இளைஞனாக, முதிர்ச்சிபெற்ற அரசியல் வாதியாக அவர் தனது வாழ்நாள் முழுவதையும் தமிழ் மக்களின் விடுத லைக்காகச் செலவழித்தார் என்பதே உண்மை.

கடந்த பத்து வருடங்களாக தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று தனது கட்சியை தமிழ் மக்களின் விடு தலையின்பால் வழிநடத்தி வந்தார். தமிழ் கட்சிகளை ஓரணியில் திரட்ட அவர் விரும்பியிருந்தாலும் கூட கட்சி யின் இன்றைய நிர்வாகிகள் அதற்குச் சாதகமாக இல்லை என்ற நிலை தொடர்ந்தும் இருந்து வந்தது. அதன் காரணமாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும்கூட மக்களின் பெரும் பான்மையான வாக்குகளையும் இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

சேனாதிராஜா அவர்கள் தமிழ் மக்க ளின் விடுதலைக்காக ஏழு வருடங்க ளுக்கும் மேலாக சிங்கள சிறைச்சாலை களில் சிறைவாசமும் அனுபவித்தார். தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையை வலியுறுத்தி ஒரு பாரிய ஆயுதப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டிருந்த அதே வேளையில் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமிழ் மக்களுக்கு உரித்துடைய காத்திரமான ஒரு தீர்விற்காக தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்தவர்.

தமிழரசுக் கட்சியின் நீண்ட பய ணத்தின் இறுதியானவராக சேனாதி ராஜா அவர்களே விளங்குகின்றார். நீண்ட பாரம்பரியமிக்க இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அனுபவமிக்க தலைவர்களில் மாவை சேனாதிராஜா அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இருந்தார். அவரது மறைவிற்குப் பின் தமிழ் மக்களின் விடுதலைப் போராட் டத்தை முன்னெடுத்துச் செல்ல மக்கள் நலன்சார்ந்து காத்திரமான பங்களிப் பொன்றை செய்யக்கூடிய ஆளுமையும் அனுபவமும் தமிழரசுக் கட்சிக்குள் இருக்கின்றதா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. மாவை சேனாதிராஜா வின் மரணம் என்பது தமிழரசுக் கட்சிக்குள் ஒரு பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது மாத்திரமல்லாமல், தமிழ் மக்களின் விடுதலையை நேசிக்கக்கூடிய அனைவரும் ஒன்று படுவதையும் வலியுறுத்தி நிற்கின்றது.

இன்றிருக்கின்ற தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஐக்கியப்பட்டு தமிழ் மக்கின் உரிமைக்காக ஒன்றுபட்டு செயற்படுவதே மாவை சேனாதிராஜாவுக்குச் செய்யக் கூடிய ஆத்மார்த்தமான அஞ்சலியாக இருக்கும்.- என்று உள்ளது.







# மாவை சேனாதிராஜாவிற்கு முல்லை நகரத்தில் அஞ்சலி

(விஜயரத்தினம் சரவணன்)

மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்ததலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு நேற்று முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள பிரதான சுற்றுவட்டப்பாதையில் அஞ்சலி பதாகை வைக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவுபிரதேச இலங்கைத் தமிழரசுக் கட்சித் தொண்டர்களின் ஏற்பாட்டில் அங்கு இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனும் பங்கேற்றிருந்தார்.

துக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் முல்லைத்தீவு பிரதான சுற்றுவட்டப்பாதை வளாகம் கறுப்பு மற்றும், வெள்ளைக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டதுடன், அவ்வாறு அலங்கரிக்கப்பட்ட இடத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா அவர்களின் உருவப்படம் வைக்கப்பட்டு,உருவப்படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலர்தூவி உணர்வுபூர்வமாக அஞ்சலி மேற்கொள்ளப்பட்டது.







# ஹமாஸ் தரப்பினரால் விடுவிக்கப்படும் பணய கைதிகளின் பெயர்கள் வெளியீடு

ஹமாஸ் தரப்பினர் இன்று விடுவிக்க வுள்ள பணய கைதிகளின் பெயர்கள் நேற்று வெளியிடப்பட்டன


ஹமாஸ் ஆயுத பிரிவின் செய்தித் தொடர்பாளர் அபு ஒபெய்டா அறிக்கை ஒன்றினை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்

இந்த நிலையில், நேற்று முன்தினம் காசாவில் மூன்று இஸ்ரேலியர்கள் மற்றும் ஐந்து தாய்லாந்து பணய கைதி கள் ஹமாசினால் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, விடுவிக்கும் செயல் முறைமையில் ஏற்பட்ட தாமதத்தின் பின்னர் 110 பாலஸ்தீனிய கைதிகளை இஸ்ரேல் விடுவித்துள்ளது.

தம்மால் விடுவிக்கப்படும் பணய கைதிகள் பாதுகாப்பாக வெளியேறுவது உறுதிப்படுத்தப்படும் வரை விடுவிக்கும் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும், பணய கைதி களைப் பாதுகாப்பாக அனுப்ப மத்தியஸ் தர்கள் உறுதியளித்துள்ளதாக பிரதமர்







அலுவலகம் தெரிவித்ததன் பின்னர் விடுவிக்கும் செயல்பாடுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுகின்றன என குறிப் பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் ஆக்கிரமித்த பாலஸ்தீன பிரதேசத்திற்கு பயணிகள் பஸ் மூலம் கொண்டுவரப்பட்டு விடுவிக்கப்பட்ட கைதிகளை மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் பிறிதொரு போராளிக் குழுவான ஃபத்தாவின் ஆயுத பிரிவான அல் -அக்சா படைய ணியின் தலைவர்களில் ஒருவரான ஜகாரியா ஜுபைடியும் ஒருவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இஸ்ரேலிய சிறை யில் அடைக்கப்பட்டிருந்த இவர், 2021 ஆம் ஆண்டு சிறையில் இருந்து மேலும் சில கைதிகளுடன் தப்பிச் சென்றார்.

இருப்பினும், இவர் பின்னர் கைது செய்யப்பட்டார் என தெரிவிக்கப்பட்டுள் ளது.





# சிரியாவின் பொதுத் துறையில் ஊழியர்களை கணிசமாக பணி நீக்கும் ஆட்சியாளர்கள்!

சிரியாவின் புதிய இஸ்லாமியத் தலைவர்கள் சிதைவடைந்த நாட்டின் பொருளாதாரத்தில் தீவிர மாற்றத்தை மேற்கொள்ளும் பணிகளை ஆரம்பித் துள்ளனர்.

இதில் மூன்றில் ஒரு பங்கு பொதுத் துறை ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குவது மற்றும் அரை நூற்றாண்டு அசாத் குடும்ப ஆட்சியின் போது ஆதிக் கம் செலுத்தும் அரசு நிறுவனங்களை தனியார்மயமாக்கும் திட்டங்கள் என்பனவும் அடங்கும்.

கடந்த டிசம்பர் 8 அன்று கிளர்ச்சி யாளர்கள் அசாத்தை வீழ்த்திய சில வாரங்களுக்குப் பின்னர் ஏற்கனவே முதல் பணிநீக்கங்களைக் கண்டுள்ள மோசடி மற்றும் ஊழலுக்கு எதிரான அறிவிக்கப்பட்ட ஒடுக்குமுறையின் வேகம், பணி நீக்கம் தொடர்பான அச்சம் என்பன அரசாங்க ஊழியர்களிடமிருந்து எதிர்ப்புகளைத் தூண்டியுள்ளது.

அசாத் மற்றும் அவரது தந்தையின் கீழ், சிரியா ஒரு இராணுவமயமாக்கப்பட்ட, அரசு தலைமையிலான பொருளாதார மாக ஒழுங்கமைக்கப்பட்டது. இது கூட்டாளிகள் மற்றும் குடும்ப உறுப்பி னர்களின் உள் வட்டத்திற்கு ஆதரவாக இருந்தது.

குடும்பத்தின் உறுப்பினர்களைச் சேர்ந்தவர்கள் பொதுத் துறையில் பெரி தும் பிரதிநிதித்துவப்படுத்தப் பட்டனர்.

அதேநேரம் தற்சமயம் அரசாங்க ஊதியத்தில் உள்ள 1.3 மில்லியன் மக்களில் 900,000 பேர் மாத்திரம் உண்மையில் பணிக்கு வருகின்றனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.



# புதிய பாம்பன் பாலம் அடுத்த மாதம் திறப்பு

ராமேஸ்வரத்தில் கட்டப்பட்டுள்ள புதிய பாம்பன் பாலத்தின் கட்டுமான பணிகள் நிறைவடைந்த நிலையில், அதன் திறப்பு விழா குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளது.

ராமேஸ்வரத்தின் முக்கிய அடையாளமாக விளங்கும் பாம்பன் பாலம் பழுதடைந்த நிலையில் அதன் அருகிலேயே புதிய பாம்பன் கட்டப்பட்டுள்ளது. 545 கோடி ரூபாவில் செங்குத்து வடிவில் திறந்து மூடக்கூடிய அமைப்புடன், பழைய பாம்பன் பாலத்தின் சிறப்புகளோடே புதிய பாலமும் கட்டப்பட்டுள்ளது.

முன்னதாக புதிய பாலத்தின் மீது ரயில் என்ஜின்களை விட்டு சோதனை நடத்தப்பட்ட நிலையில், நேற்று கடலோர காவல்படையின் கப்பல் ஒன்றை பாம்பன் பாலத்தின் குறுக்கே விட்டு அதன் திறந்து மூடும் அமைப்பை சோதனை செய்ய உள்ளனர்.

புதிய பாம்பன் பாலம் எப்போது திறக்கப்படும் என மக்கள் ஆர்வமுடன் காத்திருக்கும் நிலையில், அடுத்த மாதத்தில் தைப்பூச நாளிலோ அல்லது அதற்கு முந்தைய தினமோ பாலம் திறக்கப்படலாம் என்றும்சி புதிய பாலத்தை பிரதமர் மோடி நேரில் வந்து திறந்து வைக்க உள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஆதவ் அர்ஜுனா, நிர்மல் குமாருக்கு முக்கிய பொறுப்பு: த.வெ.க. அறிவிப்பு




தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்த ஆதவ் அர்ஜுனா த.வெ.கவின் தேர்தல் பிரச்சார மேலாண்மைப் பொதுச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல், நிர்மல் குமாருக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகப் பிரிவின் துணை பொதுச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.கவின் தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளராக இருந்த நிர்மல் குமார், வி.சி.கவின் முன்னாள் துணை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் பனையூரில் உள்ள த.வெ.க. கட்சி அலுவலகத்தில், தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் முன்னிலையில் நேற்று அக்கட்சியில் இணைந்தனர்.

இந்நிலையில், ஏற்கெனவே 2 கட்ட மாவட்டச் செயலாளர்கள நியமிக்கப்பட்டுள்ள நிலையில், இன்று 3 ஆம் கட்ட மாவட்டச் செயலாளர்கள் பட்டியல் வெளியாகியுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஆதவ் அர்ஜுனாவுக்கு தேர்தல் பிரச்சார மேலாண்மைப் பொதுச் செயலாளர் பதவியும், நிர்மல் குமாருக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகப் பிரிவின் துணை பொதுச் செயலாளர் பொறுப்பும், பி.ஜெகதீஷ்க்கு தலைமைக் கழக இணைப் பொருளாளர் பொறுப்பும் வழங்கப்படுவதாக விஜய் அறிவித்துள்ளார். பிரபல யூடியூபரும், பேச்சாளருமான ராஜ்மோகன் த.வெ.கவின் கொள்கை பரப்பு செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



# லொறி - வான் மோதி விபத்து; பஞ்சாபில் 9 பேர் உயிரிழப்பு

பஞ்சாபில் நேற்று காலை லொறியும் வானும் மோதி ஏற்பட்ட விபத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

பஞ்சாபில் பெரோஷ்பூர் மாவட்டத்தை சேர்ந்த 20 பேர் ஜலாலாபாத் நகரில் நடைபெறவிருந்த திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க நேற்று காலை வானில் சென்றுகொண்டிருந்த போதே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

பெரோஷ்பூர் - பாசில்கா நெடுஞ் சாலையில் கொல்காமவுர் கிராம் அருகே காலை 7.45 மணியளவில் வாகனம் வந்துகொண்டிருந்தபோது ஓட்டுநர் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த லொறி மீது மோதியுள்ளார்.

இந்த கோர விபத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் உள்ளூர் மக்களுடன் சேர்ந்து காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து குறித்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.02.2025




இன்று உங்கள் செயல்களில் எச்சரிகையும் பொறுமையும் தேவை. இன்று சிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும்.

இன்று வயிறு உப்பச பாதிப்பு ஏற்படலாம்.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது . இதனை நீங்கள் ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மனநிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள். பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அடிப்படை தேவைகளை சமாளிப்பதும் நிதிநிலையை சமாளிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.




இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.




இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைகாது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 01.02.2025




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்காண பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப்ப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று உற்சாகமான நாளாக இருக் கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள் வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.உங்கள் ஆரோக்கியம் திடமாகவும் ஸ்திரமாகவும் இருக்கும்.




இன்று அமைதி காணப்படும். இன் றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசர ணையாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் அணுகு முறையில் யதார்த் தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.



# நேற்று நள்ளிரவு முதல் சுப்பர் டீசல் விலை அதிகரிப்பு

இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தமது எரிபொருள் விலைகளில் திருத்தம் மேற்கொண்டுள்ளது.

எரிபொருள் விலை சூத்திரத்தின் மாதாந்திர விலை திருத்தத்தின் படி நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, லங்கா சுப்பர் டீசலின் விலை 18 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 331 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏனைய எரிபொருள்களின் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

அதன்படி, மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 183 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒக்டென் 92 ரக பெற்றோல் லீற்றரொன்றின் விலை 309 ரூபாயாகவும், ஒக்டென் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 371 ரூபாயாகவும் தொடர்ந்தும் பேணப்படும் என இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதேநேரம், ஒட்டோ டீசல் லீற்றரொன்றின் விலையை 286 ரூபாயாக, தொடர்ந்தும் மாற்றமின்றி பேணுவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.